## CHAS என்றால் என்ன?

சமூக சுகாதார உதவித் திட்டம் (CHAS) உங்கள் வயது மற்றும் வருமானத்தைப் பொருட்படுத்தாமல், அனைத்து சிங்கப்பூரர்களுக்கானது. நாடளாவிய ரீதியில் சுகாதாரப் பராமரிப்பில் உங்கள் பங்குதாரர் 1,000க்கும் மேற்பட்ட CHAS மருந்தகங்களில் மருத்துவம் மற்றும் பல் பராமரிப்புக்கான மானியங்களை வழங்குகிறது.

## CHAS நன்மைகள்

CHAS உடன், உங்களுக்கு அருகிலுள்ள தனியார் மருந்தகங்கள் மற்றும் பல் மருத்துவ மனைகளில் நீங்கள் நிதி உதவிகளைப் பெறலாம். நீங்கள் பெறும் நிதி உதவிகளின் அளவு நீங்கள் வைத்திருக்கும் அட்டையின் வகையைப் பொறுத்தது.

| ஒவ்வொரு சிங்கப்பூரருக்கும் CHAS நிதி உதவிகள் | பச்சை CHAS | ஆரஞ்சு CHAS | நீல CHAS | Merdeka Generation | Pioneer Generation |
|---|---|---|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பொதுவான நோய்கள் | – | ✓ | ✓ | ✓ | ✓ |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் | – | ✓ | ✓ | ✓ | ✓ |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை* | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

### தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகள் மற்றும் குழந்தைப் பருவ வளர்ச்சிக்கான பரிசோதனைகளுக்கான நிதி உதவிகள்

தேசிய குழந்தை பருவ நோய்த்தடுப்பு அட்டவணை (NCIS) மற்றும் தேசிய வயது வந்தோர் நோய்த்தடுப்பு அட்டவணை (NAIS) ஆகியவற்றின் கீழ் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் சிங்கப்பூர் குடிமக்கள், தேசிய அளவில் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கான நிதி உதவிகளுக்கு தகுதியுடையவர்கள்.

பரிந்துரைக்கப்பட்ட தொடுப்புள்ளிகளின்படி CHAS மருந்தகங்களில் குழந்தைப் பருவ வளர்ச்சி பரிசோதனைகளில் கலந்துகொள்ளும் அனைத்து சிங்கப்பூர்க் குழந்தைகளும் (0 முதல் 6 வயது வரை) நிதி உதவிகளுக்குத் தகுதி பெறுவார்கள்.



*முன்பு வாழ்நாள் முழுவதும் பரிசோதனை என்று அழைக்கப்பட்டது.



## பச்சை CHAS

### வருமான அளவுகோல்கள்

| | |
|---|---|
| ஒரு நபரின் மாதாந்திர குடும்ப வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,300 க்கு மேல் |
| வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $31,000 க்கு மேல் |

### நன்மைகள்

| நிதி உதவிகள் | | தொகை |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (எளிமையானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $28 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $112 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (சிக்கலானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $40 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $160 |
| பொதுவான நோய்கள்[2] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | பொருந்தாது |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் | ஒரு செயல்முறைக்கு நிதி உதவி வரம்பு | பொருந்தாது |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை[3] | | தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு $5 |

| மேலும் ஆரோக்கியமான SG நாள்பட்ட நோய் படிநிலை கீழ்[4] | | |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய்க்கான மருந்துகள் | | 50% நிதி உதவி, தொகை வரம்பு இல்லை |
| அனைத்து சேவைகள் மற்றும் பிற மருந்துகள் | எளிமையானது[1] | ஒரு வருகைக்கு $28 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $80 வரை |
| | சிக்கலானது[1] | ஒரு வருகைக்கு $40 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $110 வரை |





## ஆரஞ்சு CHAS

### வருமான அளவுகோல்கள்

| | |
|---|---|
| ஒரு நபரின் மாதாந்திர குடும்ப வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $1,501–$2,300 |
| வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,001–$31,000 |

### நன்மைகள்

| நிதி உதவிகள் | | தொகை |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (எளிமையானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $50 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $200 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (சிக்கலானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $80 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $320 |
| பொதுவான நோய்கள்[2] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $10 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் அக்டோபர் 2025 முதல் | ஒரு செயல்முறைக்கு நிதி உதவி வரம்பு | $7.50–$410 (நடைமுறையை சார்ந்தது) |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை[3] | | தகுதியான சிங்கப்பூரர்களுக்கு $2 |

| மேலும் ஆரோக்கியமான SG நாள்பட்ட நோய் படிநிலை கீழ்[4] | | |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய்க்கான மருந்துகள் | | 75% நிதி உதவி, தொகை வரம்பு இல்லை |
| அனைத்து சேவைகள் மற்றும் பிற மருந்துகள் | எளிமையானது[1] | ஒரு வருகைக்கு $50 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $130 வரை |
| | சிக்கலானது[1] | ஒரு வருகைக்கு $80 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $210 வரை |





## நீல CHAS

### வருமான அளவுகோல்கள்

| | |
|---|---|
| ஒரு நபரின் மாதாந்திர குடும்ப வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $1,500 மற்றும் அதற்கும் கீழே |
| வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000 மற்றும் அதற்கும் கீழே |

### நன்மைகள்

| நிதி உதவிகள் | | தொகை |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (எளிமையானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $80 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $320 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (சிக்கலானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $125 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $500 |
| பொதுவான நோய்கள்[2] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $18.50 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் அக்டோபர் 2025 முதல் | ஒரு செயல்முறைக்கு நிதி உதவி வரம்பு | $11–$615 (நடைமுறையை சார்ந்தது) |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை[3] | | தகுதியான சிங்கப்பூரர்களுக்கு $2 |

| மேலும் ஆரோக்கியமான SG நாள்பட்ட நோய் படிநிலை கீழ்[4] | | |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய்க்கான மருந்துகள் | | 75% நிதி உதவி, தொகை வரம்பு இல்லை |
| அனைத்து சேவைகள் மற்றும் பிற மருந்துகள் | எளிமையானது[1] | ஒரு வருகைக்கு $80 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $210 வரை |
| | சிக்கலானது[1] | ஒரு வருகைக்கு $125 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $330 வரை |





## மெர்டேக்கா தலைமுறை



### நன்மைகள்

| நிதி உதவிகள் | | தொகை |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (எளிமையானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $85 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $340 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (சிக்கலானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $130 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $520 |
| பொதுவான நோய்கள்[2] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $23.50 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் அக்டோபர் 2025 முதல் | ஒரு செயல்முறைக்கு நிதி உதவி வரம்பு | $16–$620 (நடைமுறையை சார்ந்தது) |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை[3] | | தகுதியான முதியோருக்கு $2 |

| மேலும் ஆரோக்கியமான SG நாள்பட்ட நோய் படிநிலை கீழ்[4] | | |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாள்பட்ட நோய்க்கான மருந்துகள் | | 81.25% நிதி உதவி, தொகை வரம்பு இல்லை |
| அனைத்து சேவைகள் மற்றும் பிற மருந்துகள் | எளிமையானது[1] | ஒரு வருகைக்கு $85 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $230 வரை |
| | சிக்கலானது[1] | ஒரு வருகைக்கு $130 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $350 வரை |



## முன்னோடித் தலைமுறை



### நன்மைகள்

| நிதி உதவிகள் | | தொகை |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (எளிமையானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $90 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $360 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் நிலைமைகள் (சிக்கலானது)[1] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $135 |
| | ஆண்டு அதிகபட்ச வரம்பு | $540 |
| பொதுவான நோய்கள்[2] | ஒரு வருகைக்கான நிதி உதவி வரம்பு | $28.50 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பல் மருத்துவ சேவைகள் அக்டோபர் 2025 முதல் | ஒரு செயல்முறைக்கு நிதி உதவி வரம்பு | $21–$625 (நடைமுறையை சார்ந்தது) |
| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை[3] | | தகுதியான முதியோருக்கு இலவசம் |

| மேலும் ஆரோக்கியமான SG நாள்பட்ட நோய் படிநிலை கீழ்[4] | | |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட நாள்பட்ட நோய்க்கான மருந்துகள் | | 87.5% நிதி உதவி, தொகை வரம்பு இல்லை |
| அனைத்து சேவைகள் மற்றும் பிற மருந்துகள் | எளிமையானது[1] | ஒரு வருகைக்கு $90 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $240 வரை |
| | சிக்கலானது[1] | ஒரு வருகைக்கு $135 வரை நிதி உதவி, ஆண்டுக்கு $360 வரை |

1 "எளிமையானது" என்பது ஒரு நாள்பட்ட நோய் நிலைக்கான வருகைகளைக் குறிக்கிறது. "சிக்கலானது" என்பது பல நாட்பட்ட நோய் நிலைமைகளுக்கான வருகைகள் அல்லது சிக்கலுடன் கூடிய ஒற்றை நாட்பட்ட நோய் நிலைமையைக் குறிக்கிறது.

2 அனைத்து CHAS மருந்தகங்களிலும், ஒரு வருடத்திற்கு ஒரு நோயாளிக்கு பொதுவான நோய்களுக்கான 24 வருகைகள்.

3 முன்பு வாழ்நாள் முழுவதும் பரிசோதனை என்று அழைக்கப்பட்டது. மேலும் தகவலுக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

4 CHAS/MG/PG அட்டைகளுடன் மேலும் ஆரோக்கியமான எஸ்.ஜி க்கு பதிவு செய்பவர்கள், தற்போதுள்ள CHAS நாள்பட்ட நிலைமைகள் அல்லது மேலும் ஆரோக்கியமான எஸ்.ஜி நாட்பட்ட நிலைமைகள் ஒன்றைத் தேர்வு செய்யலாம், அது அவர்களின் மருந்துத் தேவைகளின் அடிப்படையில் அவர்களுக்குச் சிறந்த பயனளிக்கும். அவர்கள் பதிவுசெய்த மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி தனியார் மருந்தகத்தில் மட்டுமே நிதி உதவிகள் பொருந்தும்.

# CHAS க்கு எப்படி விண்ணப்பிப்பது?

**படி 1**
செல்க www.chas.sg/apply

**படி 2**
"Apply now" என்பதைக் கிளிக் செய்து, சிங்பாஸைப் பயன்படுத்தி உள்நுழையவும்

**படி 3**
உங்கள் குடும்ப விவரங்களைச் சரிபார்த்து, உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்

**மின்னிலக்க CHAS அட்டை இப்போது உங்கள் சிங்பாஸ் செயலியில் கிடைக்கிறது!**



சமீபத்திய தகவலுக்கு,
www.chas.sg
ஐப் பார்வையிட QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

அல்லது அழைக்கவும்
1800-275-2427
(1800-ASK-CHAS)

அக்டோபர் 2025 அன்று தகவல் சரியானது

## ஒரு நபருக்கான உங்கள் குடும்ப மாத வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

மொத்த மாத குடும்ப வருமானம்* குடும்பத்தில் இருக்கும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கப்படுகிறது ஒன்றாக வாழும் உறுப்பினர்கள்**.




## வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) என்றால் என்ன (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு)?

சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தால் (IRAS) மதிப்பிடப்பட்டபடி, உங்கள் வீட்டின் AV என்பது, வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பராமரிப்புக் கட்டணங்களைத் தவிர்த்து, வாடகைக்கு விடப்பட்டால், மதிப்பிடப்பட்ட மொத்த வருடாந்திர வாடகையாகும்.



* மொத்த மாத வருமானம் என்பது அடிப்படை வருமானம், கூடுதல் நேர ஊதியம், கொடுப்பனவுகள், பண விருதுகள், கமிஷன்கள் மற்றும் போனஸ் ஆகியவற்றைக் குறிக்கிறது.

** ஒரே அடையாள அட்டை முகவரியைப் பகிர்ந்து கொள்ளும் மற்றும் இரத்தம், திருமணம் அல்லது சட்டப்பூர்வ தத்தெடுப்பு மூலம் தொடர்புடைய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே இந்த கணக்கீட்டில் சேர்க்கப்படுவார்கள்.

## CHAS பாதுகாப்பு

### நாள்பட்ட நோய் நிலைமைகள்

- ஒவ்வாமை நாசியழற்சி
- பதட்டம்+
- ஆஸ்துமா
- கெடுதி குறைந்த ஆண்சுரப்பி வீக்கம்
- இருமனக் குழப்பம்+
- நாள்பட்ட ஹெபடைடிஸ் B
- நாள்பட்ட அடைப்பு நுரையீரல் நோய்
- முதுமைக்கால மறதி
- நீரிழிவு நோய் (நீரிழிவுக்கு முந்தைய நிலைமை உட்பட)
- வலிப்பு நோய்
- கீல்வாதம்
- உயர் இரத்த அழுத்தம் (அதிக இரத்த அழுத்தம்)
- இஸ்கிமிக் இதய நோய்
- இரத்தக் கொழுப்புப் பிரச்சினைகள் (எ.கா. அதிக கொழுப்பு)
- கடும் மனச்சோர்வு+
- நாட்பட்ட சிறுநீரக அழற்சி
- முதுமை மூட்டு அழற்சி
- எலும்புப்புரை
- பார்கின்சன் நோய்
- தடிப்புத் தோல் அழற்சி
- முடக்கு வாதம்
- கடும் மனநோய்+
- பக்கவாதம்

### பொதுவான நோய்கள்#

- வயிற்று வலி
- இருமல், சளி, காய்ச்சல்
- வயிற்றுப்போக்கு
- காய்ச்சல்
- தலைவலி
- தோல் தொற்று மற்றும் சொறி
- கண் வலி
- சிறுநீர் பாதை தொற்று

(பட்டியல் முழுமையடையவில்லை)

# பச்சை நிற CHAS அட்டைக்கு பொருந்தாது CHAS

\+ தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தகங்களில் மட்டுமே உரிமை கோரலாம். மேலும் தகவலுக்கு www.chas.sg ஐப் பார்வையிடவும்.

## பல் மருத்துவ சேவைகள்#

அக்டோபர் 2025 முதல்

| செயல்முறை | நிதி உதவி: CHAS (ஆரஞ்சு) | CHAS (நீலம்) | Merdeka Generation | Pioneer Generation |
|---|---|---|---|---|
| ஆலோசனை | $13.50 | $20.50 | $25.50 | $30.50 |
| பற்களை பிடுங்குதல், முன்பகுதி | $19.00 | $28.50 | $33.50 | $38.50 |
| பற்களை பிடுங்குதல், பின் பகுதி | $45.50 | $68.50 | $73.50 | $78.50 |
| பற்கள் ஓட்டையை அடைத்தல், எளிமையானது | $20.00 | $30.00 | $35.00 | $40.00 |
| பற்கள் ஓட்டையை அடைத்தல், சிக்கலானது | $33.50 | $50.00 | $55.00 | $60.00 |
| நீக்கக்கூடிய செயற்கைப் பல் பொருத்துதல், முழுமையானது (மேல் அல்லது கீழ்) | $272.50 | $408.50 | $413.50 | $418.50 |
| நீக்கக்கூடிய செயற்கைப் பல் பொருத்துதல், பகுதி, எளிமையானது (மேல் அல்லது கீழ்) | $202.50 | $304.00 | $309.00 | $314.00 |
| நீக்கக்கூடிய செயற்கைப் பல் பொருத்துதல், பகுதி, சிக்கலானது (மேல் அல்லது கீழ்) | $257.00 | $385.50 | $390.50 | $395.50 |
| செயற்கைப் பல் சீரமைத்தல் /செப்பனிடுதல் (மேல் அல்லது கீழ்) | $50.00 | $75.00 | $80.00 | $85.00 |
| நிலையான பல்லீறு சீரமைத்தல் | $410.00 | $615.00 | $620.00 | $625.00 |
| மீண்டும் பல் ஓட்டையை அடைத்தல் | $23.50 | $35.00 | $40.00 | $45.00 |
| பல் வேர்க்குழிச் சிகிச்சை (முன்பகுதி) | $217.50 | $326.00 | $331.00 | $336.00 |
| பல் வேர்க்குழிச் சிகிச்சை (முன் கடைவாய்ப்பற்கள்) | $308.50 | $462.50 | $467.50 | $472.50 |
| பல் வேர்க்குழிச் சிகிச்சை (கடைவாய்ப்பற்கள்) | $389.50 | $584.50 | $589.50 | $594.50 |
| பளபளப்பாக்கல் | $13.50 | $20.50 | $25.50 | $30.50 |
| பற்காரை நீக்கல் | $20.00 | $30.00 | $35.00 | $40.00 |
| பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு | $13.50 | $20.50 | $25.50 | $30.50 |
| ஊடுகதிர் சிகிச்சை | $7.50 | $11.00 | $16.00 | $21.00 |

## ஆரோக்கியமான SG நாள்பட்ட படிநிலைகள் நிதிஉதவி கட்டமைப்பு

நிதிஉதவிக் கட்டமைப்பின் கீழ், மேலும் ஆரோக்கியமான SG யில் பதிவு செய்த CHAS அட்டை வைத்திருப்பவர்கள், முன்னோடித் தலைமுறை (PG) மற்றும் மெர்டேக்கா தலைமுறை (MG) அட்டைதாரர்களும், பல்துறை மருந்தகங்களுடன் ஒப்பிடக்கூடிய விலையில், தங்கள் பதிவுசெய்யப்பட்ட மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி தனியார் மருந்தகங்களில் பொதுவான நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளைப் பெறலாம்.

CHAS/PG/MG கார்டுதாரர்களுக்கு மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாள்பட்ட படிநிலைகள் பயனளிக்கும், அதிக மருந்துத் தேவைகளைக் கொண்டவர்கள் மற்றும் அவர்களின் செலுத்தவேண்டிய கட்டணங்கள் தற்போதைய CHAS வருடாந்திர நிதிஉதவிகளை விட அதிகமாக இருக்கலாம். உங்கள் மருந்துத் தேவைகளின் அடிப்படையில் மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாள்பட்ட படிநிலைகளைப் பயன்படுத்துவதற்கான உங்கள் தகுதியைப் பற்றி அறிந்து கொள்ள உங்கள் பதிவுசெய்யப்பட்ட தனியார் மருந்தகத்தை அணுகவும்.



# CHAS

## சிறந்த ஆரோக்கியத்திற்கான உங்கள் நண்பர்

அனைத்து சிங்கப்பூரர்களுக்கும், வயது மற்றும் வருமானத்தைப் பொருட்படுத்தாமல், அணுகக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பிற்கான உங்கள் கூட்டாளியாக CHAS உள்ளது.

நாடளாவிய ரீதியில் பங்கேற்கும் தனியார் மருந்தகங்கள் மற்றும் பல் மருத்துவ நிலையங்களில் மருத்துவம் மற்றும் பல் பராமரிப்புக்கும் நிதியுதவிகளை பெறுங்கள்.




சமூக சுகாதார உதவித் திட்டத்தின் ஒரு பகுதி